ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2479/56 - 2026 මාර්තු මස 12 වැනි මස බ්‍රහස්පතින්දා - 2026.03.12

2479/56 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வட மாகாண மாகாண சபை

### வட மாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்

1. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணை

2. வடமாகாணத்தின் ஆளுநரான நாகலிங்கம் வேதநாயகன் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மரகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்)184 ஆம் பிரிவின் (1)ந ஆம் உட்பிரிவிற்கு அமைவாக கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள்/ குற்றச்சாட்டுகள் தொடர்பாக பருத்தித்துறை நகர சபையின் செயற்பாடுகளை ஆராய்ந்து, பரிசோதித்து, விசாரணை செய்து மூன்று மாதத்துக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 ம் பிரிவின் (1A) ஆம் உப பிரிவிற்கமைவாக தனிநபர் விசாரணை சபை ஒன்றிற்காக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்ற நீதிவான் திரு. கந்தையா அரியநாயகம் அவர்களை நியமித்துள்ளேன்.


1A - PG 7572 — 04 (2026/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. விசாரணை செய்யப்பட வேண்டிய விடயங்கள் / குற்றச்சாட்டுகள்.

I. பருத்தித்துறை நகர சபையின் புதிய மரக்கறிச் சந்தையை பழைய சந்தையின் மேற்தளத்திற்கு இடமாற்றம் செய்தமை.

i. 30.07.2025 ஆந் திகதிய சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் C79/2025 புதிய மரக்கறிச் சந்தை நகரத்தின் மத்திக்கு கொண்டு செல்வதெனவும் பழைய சந்தையின் கீழ்தளத்திற்கு கொண்டு செல்வது தொடர்பில் பட்டய பொறியியலாளர் தலைமையில் வட்டாரத்திலுள்ள சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகளை இணைத்து தொழில்நுட்பக் குழு ஒன்றினை அமைத்து சாத்திய ஆய்வு ஒன்றினை நடாத்துவதெனவும் இவ் ஆய்வானது சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் சந்தையினை மீண்டும் பழைய சந்தை இயங்கிய மேற்தளத்திற்கு கொண்டு செல்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ள போதும் குறித்த விடயம் தொடர்பான நிபுணர்குழு அறிக்கை 12.11.2025 ஆந் திகதியிட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அக்குழுவில் சபைத் தீர்மானத்திற்கு முரணாக பட்டய பொறியியலாளர் அங்கத்துவம் வகித்திருக்காமை.

ii. சபைத் தீர்மானம் நிறைவேற்றியிருந்தும் குறித்த நிபுணர்குழு அறிக்கையைப் பெறுவதற்கு ஏறத்தாழ மூன்று மாதங்களிற்கு மேலாக தாமதமாகியமை.

iii. உள்ளூராட்சி ஆணையாளரால் மரக்கறிச் சந்தையை இடமாற்றம் செய்வது தொடர்பில் 2025.11.11 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 1 - 6 விடயங்களை குறிப்பிடப்பட்டு சபைத் தீர்மானத்தின் பிரகாரம் பட்டயப் பொறியியலாளர் தலைமையிலான குழுவின் அறிக்கை சந்தை இடமாற்றம் தொடர்பாக கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதிக்கமைவாக சுயாதீனக் குழுவினையும் அமைத்து அவர்களின் அறிக்கையினையும் பெற்று குறித்த சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் கருத்துகளும் பெறப்பட்டு பூரணமாக ஆராய்ந்து சாத்தியமான நிரந்தர தீர்மானம் எடுக்கப்படும் வரை மரக்கறிச் சந்தையினை இடமாற்றுவதற்கான நடவடிக்கையினை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தி வைக்குமாறும் அதுவரை குறித்த சந்தையில் வியாபாரிகளை வியாபாரத்தினை இடையூறின்றி மேற்கொள்வதற்கும் பொதுமக்கள் சந்தையை இடையூறின்றி பயன்படுத்திக் கொள்வதற்கும் உரிய ஏற்பாடுகளை செய்து வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ள போதும் இவ்வறிவுறுத்தலை நடைமுறைப்படுத்தாமை.

iv. பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலை வேண்டுமென்றே உதாசீனம் செய்து புதிய சந்தை மூடப்படும் அறிவித்தலை சந்தையின் பிரதான நுழைவாயிலின் அருகில் தானே ஒட்டியதுடன் சந்தைக்குள் இருந்த வியாபாரிகளை வெளியேறுமாறு பணித்திருந்ததுடன் சந்தையையும் பூட்டியமை.

v. பழைய சந்யில் மேற்தளத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் தொழில் ரீதியாக பாரிய நட்டமான சூழ்நிலை இருப்பதாகவும் தமது வாழ்வாதாரத்தை நடத்த முடியாமல் இருப்பதாக பருத்தித்துறை நகர சபையின் அதிகார எல்லைக்குட்படாத, பருத்தித்துறை பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்குட்பட்ட, சட்டரீதியாக பருத்தித்துறை நகர சபைக்கு உரித்தாக்கப்படாத மேற்குறித்த வீதி திருத்த வேலை மேற்கொள்வதற்கு ரூபா 426,012.00 தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சென்தோமஸ் சனசமூக நிலையத்துக்கு சபை தவிசாளரால் எழுத்து மூலமான ஒப்பந்தம் செய்யப்பட்டு குறித்த வேலை வழங்கப்பட்டு வேலை முடிவுறுத்தப்பட்டமை.

II. பருத்தித்துறை நகர சபையின் உறுப்பினர் திரு. சிவலிங்கம் பொன்னம்பலம் என்பவரால் 2025.11.20 ஆந் திகதிய விசேட சபைக் கூட்டத்தில் அரச அதிகாரிகளின் ஏதேச்சதிகாரமாக செயற்பட முடியாது எனவும் பருத்தித்துறை மரக்கறிச் சந்தை தொடர்பான உள்ளூராட்சி ஆணையாளரால் 2025.11.11 ஆந் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தலை விமர்சித்ததுடன் தனது முகநூல் பக்கத்திலும் அவற்றை பதிவேற்றம் செய்து விமர்சனங்களை முன்வைத்தமை.

III. பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் செயலாளர் ஆகியோருக்கிடையிலான முரண்பாடுகள் தொடர்பான விடயங்கள்.

a. பருத்தித்துறை நகர சபையின் தவிசாளரால் சபைச் செயலாளர் தொடர்பான முன்வைக்கப்பட்ட விடயங்கள்.

i. நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமை

ii. தவறான முறையற்ற் கடிதத் தொடர்பாடலை மேற்கொள்கின்றமை.

iii. சபைத் தவிசாளரின் பயன்பாட்டிற்கு சபையின் அலுவலக வாகனத்தை வழங்க மறுத்தமையும் அலுவலக வாகனத்தின் திறப்பினை செயலாளர் வீட்டில் வைத்திருந்தமையும்.

iv. ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பணிக்கும் கடமைகளை நிறைவேற்ற விடாது தடுத்தமை.

v. நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை புறந்தள்ளி செயற்பட்டமை.

vi. புதிய மரக்கறி சந்தை நிர்மாணம் தொடர்பாக வியாபாரிகளிடம் எவ்வித கருத்துகளை பெற்றுக் கொள்ளாமை.

குறிப்பிட்டு 40 மரக்கறி வியாபாரிகளால் 2017.03.16 ஆந் திகதியில் சபைச் செயலாளருக்கு கோரிக்கை முன்வைத்திருந்த நிலையில் LDSP திட்டத்தின் நிதி மூலமும் சபை நிதி மூலமும் மொத்தமாக ஏறத்தாழ ரூபா 72 மில்லியன் தொகையில் அமைக்கப்பட்ட புதயி சந்தைக் கட்டடத்தை பயன்பாடற்ற நிலையில் வைத்துள்ளமை.

vii. புதிய சந்தையில் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களின் சுகாதார நலன்களை கருத்திற் கொண்டு மரக்கறிச் சந்தையை தற்காலிகமாக பழைய சந்தையின் மேற்தளத்திற்கு சென்றதாக சபைத் தவிசாளர் அறிக்கையிட்டுள்ளபோதும் புதிய சந்தையில் மழை காலத்தில் மழைநீர் தேங்கி நிற்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வித காத்திரமான தீர்வுகளையும் எடுத்திருக்கவில்லை.

viii. புதிய மரக்கறிச் சந்தை நிர்மாண வேலைகளுக்கான பகிரங்க பெறுகை நடைமுறைகள் பத்திரிகை மூலம் அறிவித்தல்கள் வழங்கியிருந்தும் குறித்த நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதும் குறித்த பருத்தித்துறை நகர சபையின் நிர்வாக பிரதேசத்தில் வசித்த தற்போதைய சபைத் தவிசாளரும் உறுப்பினர்களும் வர்த்தகர் சங்கம் மற்றும் வியாபாரிகளும் அனைவரும் தெளிவாக அறிந்திருந்தும் எவ்வித முறைப்பாடுகளையும் ஆட்சேபனைகளையும் முன்வைத்திருக்காது தற்போது புதிய சந்தை நிர்மாணம் தொடர்பாக எதிர்ப்பு தெரிவித்துள்ளமை.

ix. புதிய மரக்கறிச் சந்தையை 2026 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக சபைத் தவிசாளர் பகிரங்க கேள்வி கோரியுள்ளதுடன் 2025.10.27 ஆந் திகதியில் நடைபெற்ற கேள்விச் சபையில் சபைத் தவிசாளரே கேள்விச் சபைத் தலைவராக செயற்பட்டு தெரிவு செய்யப்பட்ட சித்திகர கேள்விதாரரிடம் இருந்து கேள்வித் தொகையின் மூன்றிலொரு பங்கு வைப்புப் பணத்தை ரூபா 734,000.00 இனை பெற்று வைப்பிலிட்டிருந்த நிலையில் சந்தையை பழைய சந்தையின் மேற்தளத்திற்கு கொண்டு சென்றமை.

II. பருத்தித்துறை கல்லூரி வீதி - தம்பசிட்டி வீதி இணைப்பு வீதி திருத்தம்

a. நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4 இன் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட நகரசபையின் தத்துவங்களுக்கு முரணாகவும் பிரிவு 26(2) ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் தீர்மானம் இன்றியும்

b. பருத்தித்துறை நகர சபையின் சபைச் செயலாளரால் சபைத் தவிசாளர் தொடர்பாக முன்வைக்கப்பட்ட விடயங்கள்.

i. புதிய மரக்கறிச் சந்தை பழைய சந்தையின் மேற்தளத்திற்கு இடமாற்றப்பட்டமையானது சபைத் தவிசாளர் தங்களது அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வியாபாரிகளின் சுயநலனுடன் அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளமை.

ii. உத்தியோகத்தர், ஊழியர்களின் முன்னிலையில் தொடர்ச்சியாக தரக்குறைவாக அவமானப்படுத்தும் நோக்கில் செயலாளரை நடாத்துதல்.

iii. செயலாளராகிய தன்னையும் உத்தியோகத்தர், ஊழியர்களையும் அச்சுறுத்தும் வகையில் தவிசாளர் செயற்படல்.

IV. கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட தும்பளை கிழக்கு, முனை, மணல் ஒழுங்கை, கொட்டடி ஆகிய இடங்களில் வான் இறங்குதுறை ஆழப்படுத்தும் வேலைத்திட்டங்கள் பருத்தித்துறை நகர சபைக்கு வழங்கப்பட்டமை.

a, குறித்த அனுமதியில் ஆழப்படுத்தும் இடங்களினதும் அகழப்படும் மண் அகற்றப்படும் இடங்களினதும் GPS Coordinates தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எதிர்பாராத பெருந்தொகையான மண் அகழப்படுமிடத்து கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் அனுமதியுடன் அகற்றப்படல் வேண்டும் போன்ற நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ள போதும் குறித்த திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளரின் மேற்பார்வை வழிகாட்டலின் கீழ் குறித்த வேலைகள் நிறைவேற்றப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் அவ்வாறு அனுமதி பெறப்பட்டு குறித்த நிறைவேற்றப்பட்டமைக்கான ஆதாரங்கள் காணப்படாமை.

b. குறித்த வேலைத்திட்டத்திற்கு சபையின் உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட போதும் அவற்றின் வாகன ஓட்டக்கூற்றில் சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் கையொப்பமிட்டுள்ள போதும் வேலை மேற்கொள்ளப்பட்ட திகதி, வேலை ஆரம்பிக்கப்பட்ட நேரம், முடிவடைந்த நேரம், அகற்றப்பட்ட மண் போடப்பட்ட இடங்களின் விபரங்கள், வாகன இலக்கம், உழவு இயந்திரம் வேலை செய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கையும் பயன்படுத்தப்பட்ட எரிபொருள், அதற்கான தொகை போன்ற விபரங்கள் அடங்கிய முறையாக பதிவேடுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.

c. குறித்த வேலைத்திட்டத்திற்கு வெளிநபரின் JCB வாகனம் பெறப்பட்டு மணித்தியாலத்திற்கு ரூபா 5,500.00 (குறித்த திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட தொகை) பயன்படுத்தப்பட்டுள்ள போதும் அதனைப் பெறுவதற்கு முறையான பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அத்துடன் குறித்த JCBபெறுவதற்கு எவ்வித கடிதங்களோ ஒப்பந்தங்களோ குறித்த JCB உரிமையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

நாகலிங்கம் வேதநாயகன்**,**
வடமாகாண ஆளுநர்.

ஆளுநர் செயலகம்,
பழைய பூங்கா,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
2026, மார்ச் 10.

EOG 03 - 0130

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.